DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No. 3/2025 |
| Deposition of witness | : | PW- 5 |
| Name | : | மனோரதி |
| Father's /Husband Name | : | விஜய் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 31 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day May 2025.
Accused A1 to A3 present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது நன்னிலம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.10.2024 -ம் தேதி மாலை 6.30 மணிக்கு நான் நன்னிலம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது 39 வயது மதிக்கத்தக்க மூவேந்தன் என்பவரை அவரது சகோதரர் ராஜசேகர் என்பவர் மூலம் சிகிச்சைக்காக அழைக்கப்பட்டார். அவரை நான் விசாரித்தபோது அன்று மாலை 5.00 மணியளவில் நன்னிலம் தபால் நிலையம் அருகே தெரிந்த மூன்று நபர்கள் தன்னை அருவாளால் வயிறு மற்றும் நெஞ்சுப்பகுதியில் தாக்கியதாக நோயாளி கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை நான் பரிசோதித்த போது அவருக்கு கீழ்காணும் காயங்கள் காணப்பட்டது.

1. முதுகு பகுதியில் வலது அக்குல்பகுதியிலிருந்து கீழ்முதுகுதண்டுவடம் வரை நீண்ட நேரான 15 X 0.5 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

2. அவரது வலது வயிற்று பகுதியிலிருந்து இடது வயிற்று பகுதிவரை நேரான 20 X 0.5 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் காணப்பட்டது.

3. தொப்புல் பகுதியில் மேலும், கீழும் இரண்டு நேரான சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

4. இடது மேல்வயிற்று பகுதியில் 3 X 1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் ஒன்று காணப்பட்டது.

5. இடது காரை எலும்பு கீழ் 2 X 1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் ஒன்று காணப்பட்டது.

6. வலது நடுவிரலில் 2 X 1 செ.மீ அளவிலான கிழிந்த காயம் ஒன்று காணப்பட்டது.

அவருக்கு நான் முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். மேற்படி நபருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நபர் கூறிய வகையில் தாக்கப்பட்டிருப்பின் அவருக்கு மேற்படி காயங்கள் ஏற்பட்ட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

மேற்படி காயம்பட்ட நபர் மது அருந்தியிருந்தார் என்றால் சரிதான். ஒரு நபர் வேகமாக சென்று கீழே விழுந்திருந்தாலும் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றாலும் சரிதான்.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.28 05:14:14 +0530